*16*

# தெளிவற்ற கால கட்டம்

## *யோர்தானுக்குத் திரும்பியதிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பியது வரைக்கும் யோவான் 1:29-4:54*

**இந்தக் காலகட்டத்தின் தன்மைகள்.**—இந்தக் காலகட்டம்—பின் குளிர்காலத்திலிருந்து முன் குளிர்காலம் வரை உள்ள - ஒன்பது அல்லது பத்து மாதங்களைக் கொண்டுள்ளது. இதன் பதிவேடுகள் வெகு சிலவாகவும் துணுக்கானதாகவும் உள்ளன. இந்தக் காரணத்தினாலும், மற்றும் இயேசு மெதுவாகவே பொதுக் கவனத்திற்கு வந்தார் என்ற உண்மையினாலும், இது தெளிவற்ற காலகட்டம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் யூதேயாவிலேயே செலவிடப்பட்டது, மற்றும் இதைப் பற்றி நாம் அறிந்துள்ள சில விஷயங்களுக்காக நாம் யோவானுக்குக் கடன் பட்டுள்ளோம். இது அதிகமான அற்புதங்கள் நிகழ்த்துதல் என்பதற்கு மாறாக, போதித்தலின் ஆண்டாகவும், வெளிப்படையான உரையாடல் என்பதற்கு மாறாக, தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான போதனையின் ஆண்டாகவும் இருந்தது. இயேசுவின் ஊழியத்தினுடைய வளரும் வல்லமைக்கு முன்பாக யோவானின் ஊழியம் தேயத் தொடங்கினாலும், அது தொடர்ந்துகொண்டுதான் இருந்தது (யோவா. 4:1-3). தொடக்க நாட்கள் கலிலேயாவில் கடந்து சென்றன; இக்காலகட்டத்தின் பெரும் பாலான பகுதியானது யூதேயாவில் கடந்து சென்றது.

### I. கலிலேயாவில் தொடக்க கால ஊழியங்கள்.

***1. முதல் சீஷர்கள்.***—இயேசு சோதிக்கப்பட்ட பிறகு தமது சகாப்தத்தை ஏற்படுத்தும் ஊழியத்தில் பிரவேசிப்பதற்காக யோர்தானுக்குத் திரும்பினார். அங்கு அவர் தேவ ஆட்டுக்குட்டி என்று யோவானால் சுட்டிக் காட்டப்பட்டார். ஐந்து இளம் மனிதர்கள், ஒரு பகுதி யோவானின் சாட்சியத்தினாலும், சந்தேகமின்றி இயேசுவின் சொந்த போதனை மற்றும் ஆளுமைத் தன்மையினால் அதிகம் வல்லமை நிறைந்த வகையிலும் அவருடைய சீஷத்துவத்திற்குள் இழுக்கப்பட்டனர். யோவானின் சீஷர்கள் இயேசுவின் (சீஷத்துவ) அமைப்பினுள் மொத்தமாகச் செல்லாதிருந்தனர்; ஆயினும் இந்தக் காலம் முழுவதிலும் இயேசு பெருகத் தொடர்ந்தார் மற்றும் யோவான் சிறுகத் தொடந்தார்; மற்றும் மாபெரும் ஆத்துமாவைக் கொண்ட முன்னோடி அவ்விதமாகவே அதைக் கொண்டிருப்பார் (யோவா.

*3:25-30*). இந்த முதல் ஐந்து சீஷர்களின் பெயர்கள் மறக்கப்படக் கூடாது. அவைகள் யோவான், அந்திரேயா, பேதுரு, பிலிப்பு மற்றும் நத்தானியேல் என்பவைகளாக உள்ளன.

***2. முதல் அற்புதம்.***—இயேசு உடனடியாக யோர்தானின் கீழ்ப்பகுதியை விட்டுத் தாம் புதிதாய்க் கண்டறிந்த சீஷர்களுடன் புறப்பட்டு, தனது சொந்த மாகாணமாகிய கலிலேயாவில் ஒரு சிறு சுற்றுப் பயணத்திற்குச் சென்றார். அச்சமயம் நாசரேத்தின் அருகில் இருந்த கானா என்ற ஊரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இங்கு அவர் தம்முடைய தாயைச் சந்தித்தார், மற்றும் நாம் அற்புதங்கள் என்று அழைக்கின்ற வியத்தகு செயல்களில் முதலாவதை அவர் இங்கு நிகழ்த்தினார். அபரிமிதமான உபசரிப்பு என்பது கிழக்கத்திய ஒழுக்க நெறிகளின் முதுகெலும்பாக உள்ளது; மற்றும் இயேசு தண்ணீரைத் திராட்ச இரசமாக்கியதன் மூலம் விருந்தில் நிழலிடக் காத்திருந்த அவமானத்தை விலக்கினார்.

"உணர்வுள்ள தண்ணீர் தனது கர்த்தரைக் கண்டு சிவந்தது."

ஒரு அற்புதம் என்பது அற்புதமாகவே உள்ளது. அதைக் குறித்துத் தத்துவ விவாதம் செய்தல் என்பது பயனற்றதாக உள்ளது. நாம் அதன் இயல்பைப் பற்றி, இயற்கையின் சாதாரண செயல்முறைகளை உணர்வது போல் சிறிதளவே புரிந்துகொள்ளுகின்றோம். இயேசு தாமே எல்லா அற்புதங்களிலும் மகா பெரியவராக—காலங்களின் ஒழுக்க ரீதியான அற்புதமாக—இருந்தார். நமக்கு இயற்கைக்கப்பாற்பட்டதாக உள்ளது அவருடைய இயல்பாய் இருந்தது. படைப்பில் தேவனே திறவுகோலாய் இருந்தது போன்று, இயேசு தாமே தமது கிரியைகளுக்குத் திறவுகோலாய் இருக்கின்றார்.

***3. கலிலேய ஊழியத்தின் முடிவு.***—இயேசு தம் தாய் மற்றும் சீஷர்கள் ஆகியோர் உடன் வர, கப்பர்நகூமுக்குச் சென்றார், அதைப் பிற்பாடு, அவர் தமது கலிலேய ஊழியத்தின் மையமாக ஆக்கினார். அங்கிருந்து அவர், நாட்டின் தலைநகரான எருசலேமுக்குச் சென்றார். இவ்விதமாகத் தொடக்க கால கலிலேய ஊழியம் முடிவடைந்தது. இந்தப் பதிவேடு சுருக்கமாய் இருப்பது போன்றே, இது யோவானின் ஊழியத்துடனான ஆர்வமிக்க இரு நேரதிர்க் கருத்துக்களையும் தருகின்றது: (1) இயேசு அற்புதங்களைச் செய்பவராய் இருக்க வேண்டியிருந்தது; (2) அவர் பொதுமக்களின் பொதுவான வாழ்வுடன் கலந்திருந்தார். யோவான் ஒரு தனிமைவாதியாக/ தனியாய் வசிப்பவராக மனிதர்களின் இருப்பிடங்களை விட்டு விலகிய வராக, வனாந்தரத்தில் பிரசங்கிப்பவராக இருந்தார். மனித குலத்தை மீட்க வந்தவரோ, எல்லா வகுப்பாரிடத்திலும் தாராளமாகக் கலந்து, செல்வந்தர் களின் உபசரிப்பைப் பகிர்ந்து கொண்டு, ஏழைகளின் வீடுகளில் பிரவேசித்து, ஜெப ஆலயத்திலும் தனிப்பட்ட வீட்டிலும், தனிமையான வனாந்திரத்திலும், நாட்டுப்புறக் கிராமத்தின் சுறுசுறுப்பான கடற்கரை யிலும், மும்முரமான நகரின் கடைவீதியிலும், மற்றும் பெருமை கொண்ட தலைநகரிலும் கூட உரையாற்றினார்.

## II. யூதேயாவில் தொடக்க கால ஊழியம்.

***1. அறிமுகம்.***—*கலிலேயாவில் இயேசுவின் ஊழியம் நிச்சயமாகவே தனிமைப் பண்புகளைக் கொண்டிருந்தது, மற்றும் இது அவர் தம் சீஷர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காகவே இருந்தது (யோவா. 2:11). இப்பொழுது அவர், நாட்டின் தலைநகரிலேயே, தமது ஊழியத்தின் அதிகம் வெளிப்படையான வளர்நிலையில் பிரவேசிக்கின்றார். இவ்வித மாக அவரை மேசியா என்று ஏற்றுக் கொள்வதற்கான முதல் வாய்ப்பானது யூதேயா மற்றும் எருசலேமுக்கும், நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் தரப்பட்டது. அவர் கலிலேயா ஊழியத்திலிருந்து திரும்பி வந்தது வரையிலும் அவர்கள் அவரைப் புறக்கணித்திருந்ததில்லை.*

***2. தேவாலயத்தைச் சுத்திகரித்தல்.***—*ஆவிக்குரிய ஆராதனைக்கான வைராக்கியமும், வாழ்வின் தூய்மையும் பழைய தீர்க்கதரிசிகளின் பண்பாயிருந்தது. இந்த இளம் தீர்க்கதரிசி அதே ஆவியுடன் எருசலேமில் தம் ஊழியத்தைத் துவங்குகின்றார். பலி செலுத்துவதற்கு (விற்பனைக்கு) வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மிருகங்கள் தேவாலய வளாகத்தை ஒரு மாட்டுத் தொழுவமாக்கியிருந்தன; தேவாலய முற்றங்களிலேயே காசுக்காரர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுடன் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். எப்பொழுதும் வலுவான ஒழுக்க உறுதிப்பாடுகளை அணிவிக்கும் அந்த அதிகாரத்துடன் இயேசு தேவாலயத்திலிருந்து மந்தை களையும் வர்த்தகர்களையும் துரத்தினார்.*[1] *அவருடைய தைரியமான/ வீரமிக்க செயல்பாடானது கீழ்த்தரமான ஆட்சியாளர்களிடமிருந்து உண்மையான வருத்தத்தின் மெய்சிலிர்ப்பை எழுப்பவில்லை. மாறாக அது அவர்களின் வெறுப்புணர்வை எழுப்பியது. தலைநகரில் புறக்கணிக்கப் பட்ட நிலையில் அவர் யூதேயாவின் நாட்டுப்புற மாகாணங்களுக்குச் சென்றார்.*

***3. நிக்கொதேமுவுடன் உரையாடல்.***—*இயேசு நகரத்தில் தங்கியிருந்த பொழுது, சில அற்புதங்கள் செய்ததின் மூலம் தமது மேசியாத்துவத்தை உறுதிப்படுத்தியிருந்தார் (யோவா. 2:23; 3:2; 4:45). ஆட்சியாளர்களில் குறைந்தபட்சம், நிக்கொதேமு என்ற பெயர் கொண்ட ஒரு பரிசேயர் தனது வகுப்பாரின் வெறுப்புணர்வைப் பகிர்ந்து கொள்ளாதிருந்தார். இயேசுவின் உதடுகளிலிருந்து வீழ்ந்தவற்றிலேயே மிகவும் ஆழமான உரையாடல்களில் ஒன்றான அவருடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பு பற்றிய உரையாடலுக்கு நாம் அந்த இளம் போதகருடன் நிக்கொதேமு மேற்கொண்ட இரவு நேரப் பேட்டிக்குக் கடன்பட்டுள்ளோம்.*[2]

***4. நாட்டுப்புற ஊழியம்: யோவானுடைய கடைசி சாட்சியம்.***—*நாம் (ஏற்கனவே) கண்டுள்ளபடி நகரிலிருந்து (வெறுத்து) ஒதுக்கப்பட்ட இயேசு நாட்டுப்புறத்தில் (சென்று) இளைப்பாறியிருந்தார் (யோவா. 3:22). (இதில்) எந்த நிகழ்ச்சியும் (நாம் அறியும்படி வேதாகமத்தில்) பாதுகாத்து வைக்கப் படவில்லை; ஆனால் இயேசு யூதேயாவில் எட்டுமாதங்கள் தங்கியிருந்தார் என்பதை நாம் யோவான் 4:35ல் இருந்து உய்த்துணரலாம். அது கனி நிறைந்த மற்றும் வளருகின்ற ஊழியமாய் இருந்ததென்பது யோவானு டைய சீஷர்களின் பொறாமையிலிருந்து காண்பிக்கப்படுகின்றது*

*(யோவான் 3:26).* படைத்தலைவர்களின் பொறாமையினால் எண்ணிறந்த யுத்தங்கள் தோல்வியைத் தழுவியிருக்கின்றன. யோவான் ஒரு மாறுபட்ட அச்சில் வார்க்கப்பட்டவராயிருந்தார்; மற்றும் அவரது சீஷர்களின் இயல்பான பொறாமையானது இரண்டு வித்தியாசங்களை காட்டுகிறது. தனிப்பட்ட வகையில் யோவானின் வித்தியாசமும், மேசியாவுக்கு அவர் அளிக்கின்ற மாண்புமிக்க கடைசி புகழுரையும் ஆகும். மேசியா முன்பாக (இயேசு முன்பாக) இவர் (யோவான்) சிறுக வேண்டியதாயிருந்தது.

***5. தொடக்க கால யூதேய ஊழியத்தின் முடிவு.***—யோவான் பரிசேயர் களால் புறக்கணிக்கப்பட்டிருந்தார் (லூக். *7:30*). அவர்கள் இயேசுவின் பெரிய வெற்றிகள் மற்றும் உயர்வான ஆவிக்குரிய தன்மை ஆகியவை பற்றி இன்னும் அதிகமாக வெறுப்புக் கொண்டிருந்தார்கள். பரிசேயர்களின் இந்த வெறுப்பு, யோவானின் சீஷர்களுடைய வெறுப்புணர்வு, எல்லாவற்றிற்கும் மேலாக யோவான் சிறை வைக்கப்பட்டது ஆகியவை இயேசுவை அவரது பிரயாசங்களின் காட்சியை யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாற்றும்படி செய்தன (இ.வ. யோவா. *4:1-3*; மத். *4:1-12*).

***6. சமாரியப் பெண்.***—சமாரியாவானது, இழிவாய்க் கருதப்பட்ட தன் மக்களினத்துடன் யூதேயாவுக்கும் கலிலேயாவுக்கும் இடையில் அமைந்து கிடந்தது. யோர்தானுக்குக் கிழக்கே கடந்து செல்வதன் மூலம் யூதர்கள் அதை (சமாரியாவை) பொதுவாகத் தவிர்த்து வந்தார்கள். ஆனால் இயேசு ஏற்கனவே யூதேயாவின் வடக்கிலிருந்து வெகு தொலைவில் இருந்தார்; மேலும் அவருடைய இருதயத்தில் இன தப்பெண்ணங்கள் எதுவும் இருந்ததில்லை. சமாரியப் பெண்ணுடன் (அவரது) உரையாடலை யோவான் பாதுகாத்து வைத்துள்ளார். அவருடைய (இயேசுவினுடைய) வாழ்வும் வார்த்தையும் ஊழியங்களும் ஏற்கனவே, யோவான், அந்திரேயா, பேதுரு மற்றும் திரளான கூட்டத்தாரிடம் உறுதிப்பாட்டை ஏற்படுத்தி யிருந்தன; ஆனால் அவரது மேசியாத்துவம் பற்றிப் பதிவு செய்யப்பட்ட மிகத் தொடக்க கால தனிச்சிறப்புள்ள அறைகூவல் வெறுக்கப்பட்ட/ ஒதுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெயர் அறியப்படாத ஒரு பெண்ணிடம் ஏற்படுத்தப்பட்டதென்பது அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

குறிப்புகள்

[1]இயேசுவின் ஊழியத்தில் வந்த முதல் பஸ்காவின் போது நடந்த தேவாலய சுத்திகரிப்பானது, அவரது கடைசி பஸ்காவின்போது பின்னால் நடந்ததுடன் குழப்பிக் கொள்ளப்படக் கூடாது (இ.வ. மத். *21:12*). [2]யூதர்களுக்குப் பயந்ததினால் நிக்கொதேமு இரவில் வந்திருந்தார் என்று சாதாரணமாக சொல்லப்படுகிறது. அது அப்படி இருக்கக் கூடும், ஆனால் அநேகமாக அப்படியல்ல. அவரைப் பற்றி நாம் அறிந்திருக்கிற கொஞ்சமும் கூட அதிகம் சாதகமாகவே இருக்கிறது (இ.வ. யோவா. *7:50; 19:39*). அவர் இரவில் வந்ததின் காரணம், இடைஞ்சல்படாத சம்பாஷணைக் காகவே என்பதுதான் சரியானதாக இருக்கும்.